**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 01.08.2018

# நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆடி மாதம் 16ஆம் நாள் **01.08.2018** **புதன்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் குடிநீர் திட்ட செயல்பாடு மற்றும் மழையினால் சேதமடைந்த சாலைகள், மற்றும் திட்டச்சாலைகளை சீரமைக்கும் பணியினை 2018-19-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தில் ரூ:7.04 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட நிதிப்பபகிர்வில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்பமுறைகள் ந.க.எண்:12981/2018/இ3 நாள்: 24-07-2018 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| | (ரூ:கோடியில்) | | | | |
| தேனி–அல்லிநகரம் | 7.04 | 2.66 | 2.10 | 1.54 | 0.74 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) அரசு நிர்ணயித்துள்ள நிதிப்பகிர்வில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட திட்டத்திற்கான நகராட்சி பங்களிப்பினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2165/2018/இ1)

**தீர்மான எண். 608 அ. பதிவு செய்யப்பட்டது. ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் சொத்துவரிக்கு ஏற்றார்போல் கூடுதலாக 6,590 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்கிடும் பொருட்டு TUFIDCO நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடன் தொகையாக ரூ:5.20 கோடி அனுமதித்து நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:13277/2018/WS.1 நாள்: 19-06-2018 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன் அடிப்படையில் தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் கூடுதலாக 6,590 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்கிடும் பொருட்டு ரூ:244.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்ட பணி மேற்கொள்ள உரிய மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட திட்டத்திற்கான அனுமதிக்கப்பட்ட கடன் தொகையினை பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1124/2018/இ2)

**தீர்மான எண். 609 அ. பதிவு செய்யப்பட்டது. ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 03:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 14வது மாநில நிதிக்குழு நிதி 2017-18-ன் கீழ் முன்னேற்றத்தில் உள்ள உப்பார்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் தார்ச் சாலை அமைக்கும் பணியினை 23-04-2018 அன்று நேராய்வு மேற்கொண்ட மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் ஆய்வறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) தேனி – அல்லிநகரம் நகராட்சி உப்பார்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவுள்ள இடத்தில் ஏற்கனவே மண்சாலை அமைக்கப்பட்ட நிலையில் உள்ளதால் அதற்கு மேல் அடுக்காக Granular base 30 செ.மீ. கனத்திற்கு அமைத்திட அறிவுறுத்தப்படுகிறது.

2) இச்சாலை அமைக்கப்படவுள்ள பகுதியில் சுமார் 47.000 மீட்டர் நீளத்திற்கு பள்ளமாக இருப்பதால், அந்த பகுதியினை சாலையின் Gradient ஏற்ப மண்ணை நிரப்பி சாலை அமைத்திட அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட கூடுதல் பணிகளுக்கான செலவினத்தை இப்பணியின் சேமிப்புத் தொகையில் மேற்கொள்ளவும், மேலும் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணியினை செய்து முடிக்க அறிவுறுத்தப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) பணியினை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு தேவைப்படும் மேற்கண்ட கூடுதல் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை மதிப்பீட்டிற்கு மிகாமல் பணியின் சேமிப்பு தொகையில் ஈடுசெய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4039/2017/இ1)

**<u>தீர்மான எண். 610 அ. பதிவு செய்யப்பட்டது. ஆ, இ அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 14வது மாநில நிதிக்குழு நிதி 2017-18-ன் கீழ் முன்னேற்றத்தில் உள்ள உப்பார்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் தடுப்புச் சுவர் மற்றும் சாலை அமைத்தல் பணியினை 20-03-2018 அன்று நேராய்வு மேற்கொண்ட மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் ஆய்வறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) தேனி – அல்லிநகரம் நகராட்சி உப்பார்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் தடுப்புச்சுவர் மற்றும் அணுகு சாலை அமைக்கும் பணியில் தற்போது தடுப்புச் சுவர் அமைப்பதற்கான மண்வெட்டி எடுக்கும் பணி (Earthwork excavation) நடைபெற்று வருறகிறது. தடுப்புச்சுவர் பணியினை Steel மற்றும் RCC 1:1.5:3 கலவை கொண்டு அமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்பணி நடைபெறும் நிலத்தின் மட்டத்திற்கு மேல் தடுப்புச்வுசரின் அளவினை மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளதால், மேற்கண்ட தடுப்புச்சுசரினை Plain Cement Concrete 1:2:4 கலவை 20mm மெட்டல் கலவை கொண்டு அமைத்திட அறிவுறுத்தப்படுகிறது.

2) சாலை அமைக்கும் பணியில் Mahcineries Shed அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு வடக்கு பக்கம் முதல் உரக்கிடங்கு நுழைவு வாயில் கிழக்கு பக்கம் அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலை வரை சுமார் 423.000 மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலையின் மட்டத்திற்கு Gradient–க்கு ஏற்ப மட்டத்தை உயர்த்தப்பட வேண்டியதுள்ளதால், அதற்கு உரக்கிடங்கு வளாகத்தில் உயரமான பகுதியில் உள்ள மண்மேடுகளை வெட்டி எடுத்து அந்த மண்ணை கொண்டு நிரப்பி சாலை அமைத்திட அறிவுறுத்தப்படுகிறது.

இப்பணியின் பூர்வாங்க மதப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள இனங்களில் கூடுதல் அளவு மேற்கொள்ளும் செலவினத்திற்கும் மற்றும் கூடுதல் இனங்களுக்கான செலவினத்தை இப்பணியின் சேமிப்புத் தொகையில் மேற்கொள்ளவும்,

மேலும் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணியினை செய்து முடிக்க அறிவுறுத்தப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) பணியினை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு தேவைப்படும் மேற்கண்ட கூடுதல் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை மதிப்பீட்டிற்கு மிகாமல் பணியின் சேமிப்பு தொகையில் ஈடுசெய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4040/2017/இ1)

**தீர்மான எண். 611 அ. பதிவு செய்யப்பட்டது. ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 05:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:2.25 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சத்து இறுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 ஸ்ரீராம் லேஅவுட் பூங்கா மற்றும் கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலைய பூங்காவில் Onsite Composting அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 578 நாள்: 18-07-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 25-07-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.S.நாராயணசாமி | ரூ:1,84,528.30 | ரூ:1,85,343.59 | 0.44% கூடுதல் |
| 2 | திரு.M.தமிழ்செழியன் | | ரூ:1,84,493.08 | 0.22% குறைவு |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.M.தமிழ்செழியன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2226/2018//இ1)

**தீர்மான எண். 612 அ. அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 06</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) க.எண்.29-ஐ திரு.P.மகேந்திரன் என்பவர் நடத்தி வந்தார். மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் நாள் 05.07.2018-ம் தேதியன்று நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக விண்ணப்பம் தெரிவித்துள்ளார். மேற்படி கடையை பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் கோர மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2182/2018/அ3)

**<u>தீர்மான எண். 613 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் அமைந்துள்ள பழைய குப்பை கிடங்கு மற்றும் உப்பார்பட்டியில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் சேகரம் செய்யப்பட்டுள்ள பழைய குப்பைகளை ( Legacy Waste) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி அகற்றிடும் பொருட்டு மேற்கண்ட குப்பையின் அளவினை அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, திண்டுக்கல் மூலம் கணக்கீடு செய்யப்பட்டதற்கான தொகை ரூ.1,06,200/- (ரூபாய் ஒரு லட்சத்து ஆறு ஆயிரத்து இருநூறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ. மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1585/2018/இ1)

**<u>தீர்மான எண். 614 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் படி தேனி – அல்லிநகரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்திடும் பொருட்டு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | மதிப்பீடு (தொகை ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பயனிகள் தங்கும் மாளிகை வளாகத்தில் சிறு உரக்கிடங்கு அமைத்தல் | 45.00 |

| | | |
|---|---|---|
| 2 | தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்குச் சந்தையில் சிறு உரக்கிடங்கு அமைத்தல் | 45.00 |
| 3 | தேனி – அல்லிநகரம் நகராட்சி என்.ஆர்டி. நகரில் சிறு உரக்கிடங்கு அமைத்தல் | 45.00 |
| 4 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பங்களாமேடு பகுதியில் சிறு உரக்கிடங்கு அமைத்தல் | 45.00 |
| 5 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பயனிகள் தங்கும் மாளிகை வளாகத்தில் சிறு உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 6.75 |
| 6 | தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்குச் சந்தையில் சிறு உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 9.75 |
| 7 | தேனி – அல்லிநகரம் நகராட்சி என்.ஆர்டி. நகரில் சிறு உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 9.75 |
| 8 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பங்களாமேடு பகுதியில் சிறு உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 9.75 |
| 9 | 15 எண்ணம் Battery Operated Car வாங்குதல் | 27.00 |
| 10 | 2 எண்ணம் மினி டிப்பர் ஆட்டோ வாங்குதல | 11.20 |
| 11 | நகராட்சி உரக்கிடங்கிலுள்ள பழைய குப்பைகளை அகற்றுதல் | 648.00 |
| | **மொத்தம்** | **902.20** |

தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட பணிகளை 2018-19-ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தேர்வு செய்யப்பட்டள்ள மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட பணிகளுக்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1585/2018/இ1)

**<u>தீர்மான எண். 615 அ, ஆ, மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 09</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களுக்கு வசூல் செய்யும் பொருட்டு 3 ஆண்டு காலம் உரிமம் முடிவடைவதால், ஏற்கனவே வசூல் செய்த குத்தகை தொகையில் அரசாணை (நிலை) எண்..92, நாள் 03.07.2007-ன்படி 15% உயர்த்தி நிர்ணயம் செய்து வசூல் செய்யவும், குத்தகை உரிமம் காலத்தினை 3 ஆண்டு காலத்திற்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அரசாணை நிலை எண்.92 நாள் 03.07.2007-ன்படி குத்தகை தொகை உயர்வு செய்து புதுப்பித்து தரப்பட வேண்டும். இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 03.07.2007-ன்படி இப்பட்டியலில் கண்டுள்ள 242 கடைகள் 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் குத்தகை விடுவது தொடர்பாக மன்றத்தின் பொருள் வைக்கப்பட்டது. அதன்படி இந்நகர் மன்ற தீர்மான எண்.1294 நாள் 31.08.2015-ல் 30% உயர்வு செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட கடைகள் குத்தகை முடிவடைந்த நிலையில் நகராட்சி கடைகள் மூன்று ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படும் என்றும் மூன்று ஆண்டுகளை கொண்ட தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகையை மறு ஏலம் கோருவதா அல்லது குத்தகை தொகையில் 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை நீட்டிப்பு செய்து வழங்குவதா என்பது குறிதது மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.
2. நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு மேற்படி குத்தகை இனங்களுக்கு கால அவசியம் கருதி குத்தகை தொகையில் 15% உயர்வுடன் வாடகை நிர்ணயம் செய்து குத்தகை உரிம காலத்தினை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5715/2018/அ3)

**<u>தீர்மான எண். 616 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி - நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனைய க.எண்.5-க்கு திரு.V.ராஜா என்வர் செலுத்திய வைப்பு தொகை ரூ.92,640/- காலம் கடந்த நிலுவை பதிவேட்டில் உள்ளது. மேற்படி தொகையினை குத்தகைதார்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி பெற்று வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 617 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 11:

சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக 01.04.2018 முதல் அமுல்படுத்த தெரிவித்து வரப்பெற்ற அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018-ல் கீழ்கண்ட விகிதாச்சார அடிப்படையில் சொத்துவரி உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தன் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பயன்பாடு | உயர்வு செய்ய வேண்டிய விகிதாச்சாரம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு | 50% மிகாமல் |
| 2. | வாடகை குடியிருப்பு | 100% மிகாமல் |
| 3. | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100 % மிகாமல் |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள விகிதாச்சசாரத்தை பதிவு செய்யவும் மேலும் அடிப்படையில் 01.04.2018 முதல் சொத்துவரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2567/2018/அ1)

**தீர்மான எண். 618 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 12:

சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக ஏற்கனவே அரசாணை எண்.73 நகராாட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் செய்து அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பயன்பாடு | உயர்வு செய்ய வேண்டிய விகிதாச்சாரம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2. | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3. | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100 % மிகாமல் |

மேற்கண்ட இனங்களில் வ.எண்.2-ல் உள்ள வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 % மிகாமல் என தெரிவிக்கப்பட்டுள்ளதை நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள விகிதாச்சசார அடிப்படையில் 01.04.2018 முதல் சொத்துவரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2567/2018/அ1)

**தீர்மான எண். 619 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 13:

தேனி மாவட்டம், தேனி-அல்லிநகரம் நகராட்சியில் 2002-ம் வருடத்தில் பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்திய சட்டம்) 2004-ம் வருடத்திய பல்லுயில் பன்மிய விதிகள் மற்றும் 2017-ம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க, தேனி-அல்லிநகரம் நகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின்வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக் குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு தனி அலுவலரின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.செ.ராஜாராம்<br>தனி அலுலவர்(ம)ஆணையாளர் (பொ). | குழுத்தலைவர் |
| 2 | திரு.பி. மோகன்குமார்,<br>வனச்சரக அலுவலர். | செயலாளர் |
| 3 | திருமதி. மு. மகேஷ்வரி, (வனத்துறை)<br>ஜி.எச். ரோடு, தேனி. | உறுப்பினர் |
| 4 | திரு.க. சண்முகம், (வேளாண்மை துறை)<br>வீரப்ப அய்யனார் கோவில் தெரு, அல்லிநகரம். | உறுப்பினர் |
| 5 | திரு. பா. கணேசன் (கால்நடைத் துறை)<br>ஒண்டிவீரன்நகர்,பொ.க.பட்டி, தேனி | உறுப்பினர் |
| 6 | திருமதி. பா. ராமேஸ்வரி<br>ஒண்டிவீரன் நகர், தேனி. | உறுப்பினர் (பெண்கள்) |
| 7 | திருமதி.மு.சுமதி,<br>அம்பேத்கார் தெற்குத் தெரு, தேனி. | உறுப்பினர் (பெண்கள்) |
| 8 | திருமதி. பா. கலைச்செல்வி.<br>வெங்கலா கோவில் 1வது தெரு, தேனி. | உறுப்பினர் (ஆதிதிராவிடர்) |

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2428 /2018 /எப்1)

**<u>தீர்மான எண். 620 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 14:

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு-17 நேருஜி ரோட்டில் அமைந்துள்ள தேனி மகளிர் காவல் நிலையம் எதிர்புறம் உள்ள பயணிகள் நிழறுகுடைக்கு கீழ் தென் பகுதியில் சிறிய அளவில் பெட்டி அமைத்து (Small Box) பொதுமக்களக்கு இலவச சேவை மையம் மூலம் உதவி புரிய இட ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் உத்தரவுக்கும் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1344 /2018 /அ3)

**<u>தீர்மான எண். 621 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 15:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் பொது கழிப்பிடத்திற்கு மேற்குபக்கமுள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் வகையில் புதிததாக 6 கடைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:18.50 லட்சம் (ரூபாய்: பதினெட்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் பொது கழிப்பிடத்திற்கு மேற்குபக்கமுள்ள காலியிடத்தில் புதிததாக 6 கடைகள் அமைத்தல் | 18.50 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 622 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 16:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் தென்புறம், மேற்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் வகையில் புதிததாக 5 கடைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:22.50 லட்சம் (ரூபாய்: இருபத்தி இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் தென்புறம், மேற்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் புதிததாக 5 கடைகள் அமைத்தல் | 22.50 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 623 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 17:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 கம்போஸ்ட் ஓடைத் தெருவில் ஏற்கனவே உள்ள வடிகால் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால், மழைக்காலங்களில் மேற்கண்ட தெருவில் தண்ணீர் தேங்கி பொது மக்கள் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்தினை கருத்தில் கொண்டும், பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டும் மேற்கண்ட பகுதியில் மழைநீர்

வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது இன்றியமையானதாக உள்ளது. எனவே வார்டு எண்:14 கம்போஸ்ட் ஓடைத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:8.30 லட்சம் (ரூபாய்: எட்டு லட்சத்து முப்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 கம்போஸ்ட் ஓடைத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 8.30 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 624 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு தென்புறம் உள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் வகையில் புதிததாக 5 கடைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:20.50 லட்சம் (ரூபாய்: இருபது லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு தென்புறம் உள்ள காலியிடத்தில் புதிததாக 5 கடைகள் அமைத்தல் | 20.50 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 625 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 19:

தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் அமைந்துள்ள நகராட்சி தங்கும் விடுதியில் மேற்கூரை, குளியலறை கதவுகள் மற்றும் தண்ணீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைப்பது இன்றியமையானதாக உள்ளது. எனவே நகராட்சி தங்கும் விடுதியில் மேற்கண்ட பழுதுகளை சீரமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:3.30 லட்சம் (ரூபாய்: மூன்று லட்சத்து முப்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் அமைந்துள்ள நகராட்சி தங்கும் விடுதியில் மேற்கூரை, குளியலறை கதவுகள் மற்றும் தண்ணீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்தல் | 3.30 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 626 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 20:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:33 கருவேல்நாயக்கன்பட்டி பகுதியில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மண்புழு உரமாக்கும் வகையில் அதற்கான செட் மற்றும் தொட்டிகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:2.10 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:33 கருவேல்நாயக்கன்பட்டி பகுதியில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மண்புழு உரமாக்கும் வகையில் அதற்கான செட் மற்றும் தொட்டிகள் அமைத்தல் | 2.10 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 627 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்குச் சந்தையில் குத்தகைதாரர் வசூல் செய்திடும் பொருட்டு வசூல் மையம் அமைத்திட வேண்டியது அவசியமானதாக உள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி மேற்கு சந்தையில் வசூல் மையம் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.10 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்கு சந்தையில் வசூல் மையம் அமைத்தல் | 1.10 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 628 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 22:

தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் அமைந்துள்ள வசூல் மையத்தினை மேம்படுத்திட வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் உள்ள நகராட்சி வசூல் மையத்தினை மேம்படுத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:2.45 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சத்து நாற்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் உள்ள நகராட்சி வசூல் மையத்தினை மேம்படுத்துதல் | 2.45 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 629 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 23:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்திடும் பொருட்டு முதன்னை கட்ட குப்பை சேகரிக்கும் பணிக்கு தேவைப்படும் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | மதிப்பீடு (தொகை ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 35 எண்ணம் Battery Operated Car வாங்குதல் | 63.00 |
| | **மொத்தம்** | **63.00** |

தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட பணிகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தேர்வு செய்யப்பட்டள்ள மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட பணிகளுக்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1585 /2018 /இ1)

<u>**தீர்மான எண். 630 அ, ஆ, மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 24</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:2.00 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி- அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் முழுமையாக பழுதடைந்துள்ள நிலையில் உள்ள பாய்லர் மற்றும் இட்லி தயாரிக்கும் உபகரணத்தினை புதிதாக மாற்றி அமைக்கும் பணிக்கு 25-07-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.)** |
|---|---|---|
| 1 | M/s. Devi Straps, மதுரை. | ரூ:1,57,600.00 |
| 2 | M/s. Renuka Enterprises, மதுரை. | ரூ:1,56,100.00 |

<u>**அலுவலக குறிப்பு :-**</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள M/s. Devi Straps, மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மான எண். 631 அ. அனுமதிக்கப்பட்டது.**</u>

## பொருள் 25:

நகராட்சி பகுதியில் உள்ள பூங்காகளில் Onsite Compositing அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையல் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 டி8 – டி8 சாலையில் உள்ள சாந்தம் நகர் பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:2.95 லட்சம் (ரூபாய்: மூன்று லட்சத்து ஐம்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 டி8 – டி8 சாலையில் உள்ள சாந்தம் நகர் பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 2.95 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 631 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 26:

நகராட்சி பகுதியில் உள்ள பூங்காகளில் Onsite Compositing அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையல் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:33 பெருந்திட்ட வளாக சாலையில் உள்ள பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:3.55 லட்சம் (ரூபாய்: மூன்று லட்சத்து ஐம்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:33 பெருந்திட்ட வளாக சாலையில் உள்ள பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 2.60 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**தீர்மான எண். 633 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## **<u>பொருள் 27</u>:**

நகராட்சி பகுதியில் உள்ள பூங்காகளில் Onsite Compositing அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையல் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:08 வீரப்பஅய்யனார் கோயில் சாலையில் உள்ள இலட்சுமி நகர் பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:3.55 லட்சம் (ரூபாய்: மூன்று லட்சத்து ஐம்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:08 வீரப்பஅய்யனார் கோயில் சாலையில் உள்ள இலட்சுமி நகர் பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 3.55 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**<u>தீர்மான எண். 634 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## **<u>பொருள் 28</u>:**

நகராட்சி பகுதியில் உள்ள பூங்காகளில் Onsite Compositing அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையல் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 பதிய ஸ்ரீராம் லேஅவுட் பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.70 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:14 பதிய ஸ்ரீராம் லேஅவுட் பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 1.70 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**<u>தீர்மான எண். 635 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 29</u>:

நகராட்சி பகுதியில் உள்ள பூங்காகளில் Onsite Compositing அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையல் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:32 அரண்மனைப்புதூர் சாலையில் உள்ள பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:2.65 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:32 அரண்மனைப்புதூர் சாலையில் உள்ள பூங்காவில் Onsite Compositing மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 2.65 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018 /இ1)

**<u>தீர்மான எண். 636 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி